www.Padasalai.Net www.TrbTnpsc.com

V9T

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

-----

வகுப்பு 9

தமிழ்

காலம்: 3.00 மணி                                                        மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக:**                                        15×1=15

1) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ............
அ) திசைச்சொற்கள்  ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள்  ஈ) தொகைச்சொற்கள்

2) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி  ஆ) ஆறு  இ) இலஞ்சி  ஈ) புலரி

3) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு -
அ) வேற்றுமைத்தொகை  ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை  ஈ) வினைத்தொகை

4) ஒன்றறிவதுவே உற்றறிவதுவே இரண்டறிவதுவே அதனோடு நாவே இவ்வடிகளில் அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல்  ஆ) தொடுஉணர்வு  இ) கேட்டல்  ஈ) காணல்

5) யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் - இது யாருடைய வரிகள்?
அ) பாரதிதாசன்  ஆ) ஈரோடு தமிழன்பன்
இ) பாரதியார்  ஈ) கவிமணி

6) செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை ............
அ) செய்வினை  ஆ) செயப்பாட்டு வினை
இ) தன்வினை  ஈ) உடன்பாட்டு வினை

7) கோதாவரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணை ............
அ) முல்லைப் பெரியாறு அணை  ஆ) கல்லணை
இ) தௌலீஸ்வரம் அணை  ஈ) பாபநாசம் அணை

8) சேக்கிழார் காலம் ............ ஆம் நூற்றாண்டு.
அ) 12  ஆ) 13  இ) 14  ஈ) 16

9) தமிழில் ஏறத்தாழ ............ துணைவினைகள் உள்ளன.
அ) 46  ஆ) 56  இ) 30  ஈ) 40

10) உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் ............
அ) மணிமேகலை  ஆ) புறநானூறு  இ) திருக்குறள்  ஈ) பெரியபுராணம்

11) கவிஞர் வைரமுத்து பெற்ற விருது ............
அ) பாரதரத்னா  ஆ) பத்மஸ்ரீ  இ) பத்மவிபூஷண்  ஈ) பத்மபூஷண்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாழை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால்

12) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) புறநானூறு  ஆ) மணிமேகலை  இ) பெரியபுராணம்  ஈ) தமிழ்விடுதூது

13) இந்நூலின் ஆசிரியர் யார்?
அ) சீத்தலைச்சாத்தனார்  ஆ) சேக்கிழார்
இ) வைரமுத்து  ஈ) தொல்காப்பியர்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

14) இப்பாடலில் மேதி என்பதன் பொருள் என்ன?

அ) எருமை ஆ) குதிரை இ) வாளைமீன் ஈ) சங்கு

15) இப்பாடலில் வாளைமீன் துள்ளிப் பாய்வது எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?

அ) மலை ஆ) மழை இ) வானவில் ஈ) கருமேகம்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய அளவில் விடையளி:** 4×2=8

**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

அ) உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை கூவல் என்று அழைக்கப்படுகிறது.

ஆ) 1991 இல் இணையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது.

17) பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

18) நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

19) இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

20) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

21) 'தரும்' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய அளவில் விடையளி:** 5×2=10

22) **ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக:**

சேர்ந்து - சேர்த்து

23) **மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

கண்ணும் கருத்தும்

24) **கலைச்சொல் தருக:**

அ) Water Management

ஆ) Missile

25) **பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க:**

நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.

26) **அகராதியில் காண்க:**

அ) செம்மல்

ஆ) சிட்டம்

27) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

28) **உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக:**

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற பொருள்களும் உறுதிப்படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 2×3=6

29) வேளாண் உற்பத்தியில் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

30) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை, இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன-திபெத்திய மொழிகள் என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்கு பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

அ) இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என்று குறிப்பிட்டவர் யார்?

ஆ) இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை எத்தனை?

இ) இந்தியாவில் பேசப்படும் மொழிகளை எத்தனை மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **2×3=6**

32) "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

33) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34) அ) **அறிவியல்......** எனத் தொடங்கி **ஏற்றுங்கள்.....** என முடியும் ஓ என் சமகாலத் தோழர்களே மனப்பாடப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **காடெல்லாம்.....** எனத் தொடங்கும் பெரியபுராண மனப்பாடப் பாடலை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **2×3=6**

35) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

36) தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

37) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - **இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **5×5=25**

38) அ) 'விண்வெளியில் நான்' - என்ற தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.


**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

39) அ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க. **(அல்லது)**

ஆ) நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்று எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41) நயம் பாராட்டுக:

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!
கடலிலே கோடிகோடிக் கதிர்க்கைகள் ஊன்று கின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை பரிதி வாழி!

- பாரதிதாசன்

42) அ) நீ பாராட்டுப் பெற்ற சூழல்கள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) பொன்மொழிகளை மொழிபெயர்க்க:

1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity - Mother Teresa
4. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam
5. Winners don't do different things; they do things differently - Shiv Khera

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக:** **3×8=24**

43) அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

44) அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழ் பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

45) அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை உருவாக்குக.

----------

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com